முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1634

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.03.2024,** புதன்கிழமை

1. ஞானிகளை கலியுகத்திலும் படைக்க
ஞானஅவதாரம் கொண்ட அரங்கனே
கனிவேலவன் யானும் உந்தனுக்கு
கருணைகொண்டு உன்னுள்ளே சக்தியாக

2. சக்தியாக இறங்கி அற்புதம் நிகழ்த்த
சாற்றிடுவேன் உன்சக்தி பெருக வேண்டி
உத்தமமாய் சுப்பிரமணியர் யானும்
உலகத்தில் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி உரைப்பேன்

(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 07 ம் நாள், 20.03.2024, புதன்கிழமை)

3. உரைக்கவே அரங்கன் நீயே கலியின் சிறந்த ஞானி
உயர்வான உன் மார்க்கமே சிறந்த மார்க்கம்
தயவாக நீகாட்டும் வேத நெறியே
தரணியை காக்கும் யோக நெறியாகும்

4. நெறிவழி உலகோர் நேர்மைபட தொடர்ந்து வந்து
நீதிமான் நீகாட்டுகின்ற தர்ம வழியில்
விதி வெல்லும் சக்தியாக ஏற்று
வினவிடுவேன் வையகம் எங்கும் தர்மசாலைகள் நிறுவி

5. நிறுவி மாதர்மத்தை செய்ய
நிலவுலகுக்கு தர்மசக்தி கொண்டே
நிலைத் தன்மையும் மாற்றமும் ஊழல்வஞ்சம் கயமைஇல்லாத
உயர்வான ஞானஆட்சி காலமும்

6. காலமதும் அரங்கன்உன் அவதார நோக்கமாக
கலியினில் ஆறுமுகன்யான் அரங்கேற்றுவேன்
பழி பாவம் துன்பங்கள்
பலி இடுகின்ற கொடுமைகள்

7. அனைத்தும் அகன்றோடி இழிவில்லாத
இணையில்லாத வண்ணம் ஞான ஆட்சிக் காலத்தை
இனிதே அரங்கன் உன் அவதாரமாக
ஏழாம் படைவீடு கொண்டு ஆறுமுகன் யான் நிறைவேற்றுவேன்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–